# ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA


| வெளியிடுபவர் | தொடர்பூட்டல் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2024.02.12 |

**இலங்கை மத்திய வங்கியின் ஆளுகைச் சபைக்கு இரண்டு புதிய உறுப்பினர்களின் நியமனம்**

2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளினது நியதிகளில், இலங்கை மத்திய வங்கியின் ஆளுகைச் சபை, இலங்கை மத்திய வங்கியின் நிருவாகம் மற்றும் அலுவல்களின் முகாமைத்துவம் என்பனவற்றை மேற்பார்வை செய்வதற்கான பொறுப்புக்களைக் கொண்ட சபையாகவும் இலங்கை மத்திய வங்கியின் பொதுவான கொள்கைகளைத் தீர்மானிக்கும் சபையாகவும் நிறுவப்பட்டிருக்கிறது.

***ஆளுகைச் சபை***

ஆளுகைச் சபையானது ஆளுகைச் சபையின் தலைவராகச் செயலாற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரான முனைவர். பி. நந்தலால் வீரசிங்க, திரு. ஏ. என் பொன்சேகா (2022.07.27 இலிருந்து இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் நியமன உறுப்பினராக இருந்த இவர் ஆளுகைச் சபையின் உறுப்பினராகத் தொடர்ந்தும் பணியாற்றுகின்றார்) முனைவர். ரவி ரத்னாயக்க (2023.09.21 அன்று நியமிக்கப்பட்டார்), திரு. அனுஷ்க எஸ் விஜயசிங்க (2023.09.21 அன்று நியமிக்கப்பட்டார்) மற்றும் திரு. விஷ் கோவிந்தசாமி (2023.10.26 அன்று நியமிக்கப்பட்டார்) ஆகியோரை உள்ளடக்கியிருக்கிறது.

மேலும், நாம் இத்தால் திரு. ரஜீவ் அமரசூரிய மற்றும் திரு. மணில் ஜயசிங்க ஆகியோர் ஆளுகைச் சபைக்கு நியமிக்கப்பட்டிருப்பது பற்றி அறியத் தருகிறோம். புதிதாக நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் விபரக் குறிப்புக்கள் பின்வருமாறு தரப்படுகின்றன.

**திரு. ரஜீவ் அமரசூரிய – 2024 சனவரி 30ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில்**



திரு. ரஜீவ் அமரசூரிய இலங்கை சட்டதரணிகள் சங்கத்தின் உடனடியாக முற்போந்த செயலாளராகவும் பொதுமக்கள் சட்டம் மற்றும் ஒப்பந்தம், வர்த்தகம், ஆதனம், வரி விதிப்பு, வங்கித்தொழில் மற்றும் சட்டத்தின் ஏனைய துறைகள் உட்பட சிவில் சட்டவாக்கங்கள் தொடர்பான பெரும்பாலான துறைகளிலும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீண்ட காலமாக செயலாற்றி வருபவர்.

திரு. அமரசூரிய இலங்கை கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சட்ட ஆய்வுகளின் நிலையியல் குழு மற்றும் கொழும்புப் பல்கலைகழகத்தின் பேரவை உறுப்பினர் உட்பட, அநேக அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் சபை/ குழு உறுப்பினராக இருந்து வருகிறார். அவர், பொதுநலவாய சட்டக் கல்விச் சங்கத்தின் இலங்கையின் நாட்டிற்கான பிரதிநிதியாகவும் லோ ஆசியாவின் நிறைவேற்றுக் குழு உறுப்பினருமாவார்.

இவர் இலங்கை சட்டக் கல்லூரியின் ஆளுகைச் சபையினதும் மாண்புமிகு பிரதம நீதியரசர் தலைமை தாங்கும் இலங்கை சட்டக் கல்விச் சபையினதும் முன்னாள் உறுப்பினராக விளங்குவதுடன் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளராகவும் இலங்கை தேசிய வணிக நிலையத்தின் ஆளுநர்கள் சபையின் முன்னாள் உறுப்பினரும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர் சங்கத்தின் உடனடியாக முற்போந்த கடந்த காலத் தலைவருமாவார்.

கொழும்புப் பல்கலைக்கழகத்திலிருந்து சட்டத் துறையில் பட்டம் பெற்ற இவர் இலங்கை உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணியாக விளங்குவதுடன் சட்டத்தரணிகள் இறுதிப் பரீட்சையில் முதல் இடத்தைப் பெற்றதுடன் முகாமைத்துவக் கணக்காளர்கள் பட்டய நிறுவகத்தின் உறுப்பினராகவும் இலங்கை சான்றுபடுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர்கள் நிறுவகத்தின் உறுப்பினராகவும் விளங்குவதுடன் ஹவார்ட் கென்னடி ஸ்கூலின் பழைய மாணவருமாவார். 2022 ஏப்பிறலில், அவருக்கு AFGG – ரைஸ்சினா உறுப்பினர் பதவி வழங்கப்பட்டிருக்கிறது.

2013இல் முகாமைத்துவக் கணக்காளர் பட்டய நிறுவகத்தின் 40 வயதிற்குட்பட்ட மிகச் சிறந்த உறுப்பினருக்கான முகாமைத்துவக் கணக்காளர் பட்டய நிறுவகத்தின் நட்சத்திர தங்க விருதையும் 2021இல் முகாமைத்துவக் கணக்காளர் பட்டய நிறுவகம் - LMD ரெயில்பிளாஸர் என்ற நாமத்தினையும் தனதாக்கிக் கொண்டவர்.

**திரு. மணில் ஜயசிங்க - 2024 பெப்புருவரி 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில்**



திரு. மணில் ஜயசிங்க இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரும் முகாமைத்துவக் கணக்காளர் பட்டய நிறுவகத்தின் (ஐ.சி) உறுப்பினரும் இலங்கை சான்றுபடுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காளரின் உறுப்பினரும் அரச நிதி மற்றும் கணக்கீட்டு பட்டய நிறுவகத்தின் உறுப்பினருமாவார்.

ஏனஸ்ட் அன்ட் யங் நிறுவனத்தில் தனது பதவியை ஆரம்பித்த திரு. ஜயசிங்க தயாரிப்பு, சில்லறை, விருந்தோம்பல், மொத்த விற்பனை வியாபாரம் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் உட்பட பல்வேறு துறைகளில் பரந்த அனுபவத்தினைப் பெற்றவர். ஏனஸ்ட் அன்ட் யங் நிறுவனத்தில் 30 ஆண்டுகளாகப் பங்காளர் என்ற இயலாற்றலைப் பெற்றிருந்த இவர் 2021 – 2023 இலிருந்து இலங்கை மற்றும் மாலைதீவின் ஏனஸ்ட் அன்ட் யங்கின் நாட்டிற்கான முகாமைத்துவப் பங்காளராகவும் 2003 – 2023 வரை இலங்கையில் அஷ்ரன்சின் பிறக்டீஸ் இன் தலைவராகவும் இலங்கை புறவஷன் பிறக்டீஸ் பணிப்பாளராகவும் இருந்திருக்கிறார். நிதியியல் நிறுவனங்களுக்கான உபாயத் திட்டங்களின் வியாபார மற்றும் அபிவிருத்திப் பெறுமானங்களில் அவர் பெற்றிருந்த விசேடத்துவம் நிதியியல் சேவைகளில் முக்கிய வளவாளராக திரு. ஜயசிங்க அவர்களை உருவாக்கியிருக்கிறது. அவர் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம்/ இலங்கை கணக்கீட்டு நியமத்தின் தலைவராகவும் பணியாற்றியிருக்கிறார்.

அவரது பதவி, ஆலோசனை மற்றும் கைத்தொழில் அனுபவங்களில் 41 ஆண்டுகளுக்கு மேலாக பரந்து விரிந்து காணப்படுகிறது. இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் தலைவராகவும் முகாமைத்துவ கணக்காளர் பட்டய நிறுவகத்தின் இலங்கைச் சபையின் உறுப்பினராகவும் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பினராகவும் இருந்ததுடன் பன்னாட்டுக் கணக்காளர் சம்மேளனத்தின் பன்னாட்டு கணக்கீட்டு கல்விச் சபையின் உறுப்பினரும் இலங்கை கணக்கீட்டு மற்றும்

கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் உறுப்பினரும் இலங்கை சான்றுபடுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர் பேரவையின் உறுப்பினரும் மத்திய வங்கியின் கணக்காய்வாளர் ஆலோசனைக் குழுவின் உறுப்பினரும் பிஎல்சி மற்றும் வங்கிகளின் கணக்காய்வுக் குழுவின் மதியுரையாளரும் இலங்கை தேசிய வர்த்தகச் சம்மேளனத்தின் உறுப்பினருமாவார்.

தற்பொழுது, அவர் நியதிக் கணக்கீட்டு நியமங்கள் குழுவின் தலைவராகவும் நியதிக் கணக்காய்வு நியமங்கள் குழுவின் உறுப்பினராகவும் இருந்து வருவதுடன் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் மற்றைய அநேக குழுக்களிலும் பணியாற்றுகின்றார். அவர் நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் நடைமுறைப்படுத்தல் மற்றும் பொருள்கோடல் குழுவினது உறுப்பினராகவும் கணக்காளர்களின் தென்னாசிய சம்மேளனத்தின் கணக்கீட்டுக் குழுவின் தலைவராகவும் இலங்கை கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் உறுப்பினராகவும் இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகத்தினது கணக்காய்வுக் குழுவின் உறுப்பினராகவும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் இலங்கை முதலீட்டுச் சபையின் உறுப்பினராகவும் இருப்பதுடன் டிமோ, சிலோன் கொஸ்பிட்டல்ஸ், சி. டபிள்யு. மக்சி பிஎல்சி மற்றும் சாஹஹாசிய இன்வெஸ்ட்மென்ஸ் லிமிடெட் இன் சுயாதீனப் பணிப்பாளருமாவார்.